நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.82/2020**

2022ம்ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: ஈஸ்வரி** | **வயது** | **:** | **32** |
| **க/பெ.** | **: கிருஷ்ணன்** | **தொழில்** | **:** | **விவசாயம்** |
| **ஊர்** | **: பூசாரியூர்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: நாட்றம்பள்ளி** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.விவசாயம் செய்கிறேன். 1ம் எதிரி சாம்ராஜ் சின்ன மாமனார், 2ம் எதிரி அமுதா எனது சின்ன மாமியார். 3ம் எதிரி ஜெகதீஷ் எனது மச்சினன். ( எதிரிகள் மனுவில் பேரில் ஆஜரில்லை). கடந்த 03.07.2018ம்தேதி மதியம் 12.00 மணிக்கு மேல் எனது வீட்டின் அருகில் உள்ள நிலத்தில் 1 முதல் 3 எதிரிகள் நிலவரப்பை வெட்டினார்கள்.எனது கணவர் சென்று அவர்களிடம் வருடம் வருடம் இதுப்போல் செய்கிறீர்கள் என கேட்டார்.அப்போது 1ம் எதிரி தேவிடியா தொம்மச்சி என அசிங்கமான வார்த்தைகளால் எனது மாமியாரை திட்டினார்.3ம் எதிரி என் வீட்டுக்காரரை பார்த்து, ஒரு நாள் முழுவதும் அடித்தாலும், உன்னை வெட்டி போட்டாலும் கேட்க கூட ஆளில்லை என சொன்னார். 2ம் எதிரி எங்களை பார்த்து அசிங்கமாக திட்டினார். நான் இவ்வாறு செய்கிறீர்கள் நீங்கள் செய்வது நியாமா என கேட்ட போது, உங்களுக்கு நியாயம் ஒரு கேடுடா என சொன்னார். 1 முதல் 3 வரையிலான எதிரிகள் எங்கள் மூவரையும் அசிங்கமாக திட்டினார்கள். எனது கணவர் ஏன் இவ்வாறு பெண்களை ஆபாசமாக திட்டுகிறாய் என கேட்ட போது, 3ம் எதிரி கல்லால் என் கணவரின் தலை மீது தாக்கினார். எங்கள் வீட்டை பூட்டி விட்டு சாவியை எடுத்துகொண்டு சென்றால் கூட கேட்க ஆளில்லை என திட்டினார். எனது கணவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம்.என் வீட்டுக்காரர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.4ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.